அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 319/2010 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 15–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பி.சா.1 15.07.2025

பெயர் சின்னம்மாள் கணவர் பெயர் திருஞானசம்பந்தம்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>குறுக்கு விசாரணை</u>:–

இவ்வழக்கில் 5ஆம் பிரதிவாதி கற்பகம் தாக்கல் செய்த 16.12.2012 தேதியிட்ட பதிலுரையை நான் மற்றும் 1முதல் 4 பிரதிவாதிகள் எங்கள் பதிலுரையாக ஏற்றுக்கொண்டுள்ளோம் என்றால் சரிதான். ஏகாம்பர நாயக்கர் திருமுல்லைவாயில் கிராமத்தில் சர்வே எண். 764/1 ல் 15 சென்ட் நிலமும் சர்வே எண் 764/2 ல் 1 ஏக்கர் 9 சென்ட் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ஏகாம்பர நாயக்கர் என்பவருக்கு 4 மகன்கள் பாலகிருஸ்ணன், சின்னசாமி, கன்னியப்பன், துரைசாமி ஆவார்கள். ஏகாம்பர நாயக்கர் இறந்த பிறகு மேற்படி நான்கு மகன்களும் அவரது சொத்தை சமமாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி விவரத்தில் எனது பதிலுரையில் நான் மறுக்கவில்லை என்றால் சரிதான்.

மேற்படி நான்கு மகன்களில் பாலகிருஸ்ணன் மூத்தவர் என்பதால் அவருக்கு சர்வே எண் 764/1ல் 1 ஏக்கர் 9 சென்டில் இருந்து 31 சென்ட் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சொத்தின் தெற்கு ஓரமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் வடக்கில் இருக்கும் 26 சென்டை சின்னசாமி என்பவருக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதற்கு அடுத்து இருக்கும் 26 சென்டை கன்னியப்பன் என்பவருக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதற்கு வடக்கில் இருக்கும் 26 சென்டை துரைசாமி என்பவருக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நான்கு மகன்கள் பாகம் பிரித்து கொண்டதில் பாலகிருஸ்ணன் என்பவருக்கு மட்டும் 5 சென்ட் கூடுதலாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 764/1 ல் பாலகிருஸ்ணன் எந்த பாகமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனவே தான் சர்வே எண் 764/1 ல் மற்ற மூன்று மகன்கள் தலா 5 சென்டுகளாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

சர்வே எண் 764/1 ல் தெற்கு ஓரமாக சின்னசாமி என்பவருக்கு 5 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டதா என்றால் சரிதான். சர்வே எண் 764/1 மற்றும் சர்வே எண் 764/2 உள்ள சின்னசாமியின் சொத்து தற்போது துரைசாமிக்கு கொடுக்கப்பட்டது. சின்னசாமிக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் அதை துரைசாமிக்கு கொடுத்துவிட்டார்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).